**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,**

**METTUPALAYAM**

**DEPOSITION OF WITNESS**

**O.S.18/2023**

**CNR.No.TNCB19000**

Date: 09.02.2026 DW1

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | ரங்கசாமி | **வயது** | 43 |
| **த/பெ** | ராமசாமி | **வட்டம்** | மேட்டுப்பாளையம் |
| **விலாசம்** | சின்னகள்ளிப்பட்டி | **மாவட்டம்** | கோவை |
| | | **தொழில்** | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 9th February 2026

பி.வா.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

ராஜம்மாள் கெம்பியம்மாள் மற்றும் இறந்துபோன ரங்கசாமி ஆகியோர்கள் சகோதர சகோதரிகள் என்றால் சரிதான் . மேற்கண்ட மூவருக்கும் பெற்றோர்களின் பெயர் கஜ்ஜப்பன் , ஒன்னியம்மாள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது . அவர்களின் பெயர் எனக்கு தெரியும் என்றும் வழக்கிற்காக தெரியாது என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல . இறந்துபோன ரங்கசாமிக்கு மட்டுமே தாவா சொத்து பாத்தியப்பட்டது என்று சொல்லி உள்ள நிலையில் அதற்கு ஆதரவாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன் . 25.11.2023 தேதியிட்ட பி. சா. ஆ . 2 தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் பக்கம் 7-ல் மேற்படி வாதிகளின் தாயார் பெயர் கெம்பியம்மாள் பெயரும் 1, 2 பிரதிவாதிகளின் தாயார் ராஜம்மாள் மற்றும் இறந்துபோன ரங்கசாமி பெயரும் உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

தாவா சொத்து இறந்துபோன ரங்கசாமிக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என்று நான் சொல்வது முழுக்க முழுக்க பொய் என்றால் சரியல்ல . தாவா சொத்தின் மீது உள்ள வாதிகளின் உரிமையை மறைத்து முழுவதுமாக அபகரிக்க வேண்டி பொய்

சொல்கிறேன் என்றால் சரியல்ல . பி. சா. ஆ . 3 சிட்டாவானது வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு சட்ட விரோதமாக தாவா சொத்தை வாங்கியிருக்கிறேன் என்றால் சரியல்ல. 7, 8, மற்றும் 9 பிரதிவாதிகளாகிய தாங்கள் எக்காலத்திலும் தாவா சொத்தை அனுபவித்ததில்லை என்று சொன்னால் சரியல்ல . ராஜம்மாள் கெம்பியம்மாள் மற்றும் இறந்துபோன ரங்கசாமி ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தை தனிப்பட்ட முறையில் ரங்கசாமியிடமிருந்து கிரையம் பெற்றது சட்டப்படி தவறு என்று சொன்னால் சரியல்ல . மேற்படி ராஜம்மாள் கெம்பியம்மாள் மற்றும் இறந்துபோன ரங்கசாமி ஆகியோர் பெயரிலுள்ள ஆவணங்களை வாதிகள் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

எனது தகப்பனார் 25.08.1997 ல் கிரையம் பெற்றதாக சொல்லப்படும் பி . வா. சா. ஆ 1 ஆவணம் மற்றும் 25.11.2022 தேதியிட்ட பி வா சா. ஆ 2 தான செட்டில்மெண்ட் பத்திரம் ஆகியவை இரண்டு ஆவணங்களும் சட்ட முறைப்படி ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தினை கரடுமுரடாக இருந்ததை சமன்செய்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல . அதற்குரிய ஆவண ங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் அதற்குரிய ஆட்கள் உள்ளார்கள் . நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல . பி. வா. சா. ஆ 1 ஆவணத்தில் முதல் பக்கத்திலேயே தாவா சொத்தானது பிதுராஜித வகையில் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல . தனிப்பட்டமுறையில் ரங்சாமிக்கு பாத்தியப்பட்டது என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல.

வா. சா. ஆ. 2, மற்றும் 3 ஆவணங்களை ரத்து செய்து விட்டு வாதிகளுக்குரிய பாகத்தினை பிரித்து கொடுக்க வேண்டியது எனது கடமை என்றால் சரியல்ல . பொய்யான சங்கதிகளை கூறி பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்வழக்குரை மற்றும் முதல் விசாரணை வாக்குமூலத்திற்கு ஆதரவாக எந்த ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல . வா. சா. ஆ. 2, மற்றும் 3 ஆகிய ஆவணங்கள் இரண்டும் பெயரளவிலான ஆவணங்கள் என்றும் அதை ரத்து செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல . மற்ற வாரிசுகள் இருப்பதை தெரிந்தும் சட்ட விரோதமாக கிரையம் பெற்றதால் மேற்படி வா . சா. ஆ. 2, மற்றும் 3 ஆவணங்கள் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல . தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

Sd/-K.Palanivel,

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.